உ
சிவமயம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்.
14, நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

சிவபதப் பேறு குறித்த

# நினைவுமலர்

12-02-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்,
14, நாயன்மார் வீதி, நல்லூரை
வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து மறைந்த
அமரர்
சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

அவர்களின்
சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

**12.02.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம் ;



எங்கள் குடும்பத்தின் குலவிளக்காகி
அன்பை ஈர்ந்து, அறிவைப் புகட்டி,
பண்பைப் பகிர்ந்து, பாசத்தைக் கொட்டி
ஆல விருட்சமென நிழல் கொடுத்த
அணையாத தீபமாக குடும்பத்தில்
ஒளி வீசிய எம் அன்புத் தெய்வமே
நீங்கள் அமரராகி விண்ணுலகு
சென்றாலும் எம்மேல் நீங்காத நிழலாக
நிற்கிறீர்கள். உங்களின்
திருப்பாதங்களுக்கு இம்மலரைக்
காணிக்கையாக்குகின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

தோற்றம்
1924.11.16

மறைவு
2016.01.13

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு மன்மத மார்கழித் திங்கள் தன்னில்
பூண்ட பூர்வபட்ச சதுர்த்தி நாளில் - மாண்புமிகு
வேலுப்பிள்ளை எனும் வல்லோன் நானிலம் நீங்கி
இறைவனடி தாள்சேர் தினம் என்றறி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்கு மதிதவழ் மாட வீதி
மருகல் நிலாவியமைந்த சொல்லாய்
செங்கயலார் புனல் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குள் விளங்கரி யேந்தியாடும்
கணபதீச்சரங் காமுறவே.

### திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதர்த் துன்விரை
யாழ்கழற் கென்
கைதான் தலைவாத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய
போற்றி என்னும்
கைதான் தெகிழ விடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்னடியின் கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

பாதி மதிநிதி போத மணிசடை
நாதரருளிய குமரேசா
பாடு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவழி காகமுற அருள்
மாயனரிதிரு மருகோனே
காலனெனையெனு காமனுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதிஅயனொடு தேவர் சுரருள
காலும் வகையுறு சிறைமீளா
ஆடும் மயிலினி லேறிய மரர்கள்
சூல வலம்வரும் இளையோனே
சூதமிக வளர் சோலை மருவுசு
வாமிமலை தனின் தலை உறைவோனே
சூரனுடலுற வாரிசுவரிட்
வேலை விடவல பெருமானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில்
## அருளிய

# சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்று
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயி னவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடியா மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனாரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொர்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வாய்
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்க கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு.

இந்துமா கடலின் மத்தியில் தமிழும் சைவமும் செழித்து வாழும் யாழ்ப்பாணத்தின் அருகே சமீத் தீவுகளில் பெரும் தீவான நெடுந்தீவு. இங்கு கடல் அலைகள் சோ என்று இரைய, வண்டிசைபாட, வனப்புமிகு கோட்டைகளும் குதிரைகளும், கூடும் பசு இனமும் செல்விருந் தோம்பி வரவிருந்து காத்திருக்கும் மக்களும் செறிந்த நம் நாட்டில் சைவ வேளாளர் குலத்தில் தனி நாயக முதலியார் பரம்பரையில் உதித்த சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதியினரின் தலைமகனான வேலுப்பிள்ளை 1924 ஆம் ஆண்டு தரணியில் பிறந்தார். இவரின் உடன்பிறப்புகளான காலஞ்சென்ற பசுபதி, பார்பதி, கண்ணம்மா, நாகம்மா ஆகியோருடன் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (கனடா) சகோதரனும் ஆவார். இவர் துள்ளித் திரியும் பராயத்தில் பள்ளிக்கு சென்று கல்வி கற்று அரசாங்க மர கூட்டுத்தாபனத்தில் ஊழியராக பணியாற்றினர்.

அவ்வூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகளான சிவபாக்கியத்தை மணமுடித்தார். பத்தாவதற்கேற்ற பதிவிரதையாக கணவரே கண்கண்ட தெய்வமாக இல்லறம் எனும் நல்லறத்தை நல்லூர் பகுதியில் அமைத்தார்கள். செல்வத்தில் செல்வம் மக்கள் செல்வம் என்றதற்கு அமைய தலைமகளான மகேஸ்வரி எனும் பெண்பிள்ளையை பெற்று அடுத்து தனேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம், மகாலிங்கம் ,யோகேஸ்வரி, சோதிலிங்கம், இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி, சாந்தினி ஆகிய ஒன்பது மக்களையும் பெற்றெடுத்தார்கள்....

பிள்ளைகள் வளர்ந்து கல்வி கற்று மணப்பருவம் அடைந்தும் வாழ்க்கை எனும் பூஞ்சோலைக்குள் காலடி எடுத்து வைக்க தன்னாலான உதவிகளை செய்து முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் மருமக்களாகிய ஆனந்தன், குலசிங்கம் , மகேஸ்வரி, சகுந்தலா, ரகுபதி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் , றஞ்சினி, குலேந்திரன், பாலசுப்பிரமணியம், மதிஜீவன் ஆகியோர் ஆவார்.

இவரின் பேரப்பிள்ளைகள் ஆன (அனோஜா,சஞ்சீவன்),(சுரேஸ், சுபாசினி, சுதன்), ( மயூரன், தர்ஷிகா, பானுஜா, ஜசிந்தா, காலஞ்சென்ற உமாசங்கர்) மற்றும் ( கீர்த்தனா, சுமன், ரஜீத், லக்சிகா, லக்ஷன்), ( சுகிந்தன் , சுமித்தா, சுகந்தன்), (துசாந்தினி, அனுசயந்தன், பிரசாந்தினி), ( கவிதா,ரஜிதா, கார்த்திக்,விஜிதா, கௌதமி) , ( நதர்சிங், கேதீஸ்சன், பவித்திரா), (நதியா, குபிதன், டனிசா) ஆகியோருடனும் பூட்டப்பிள்ளைகளான (தர்சன்), (லக்சிகா, லக்சனா, சங்கவி), (டனார்த்தன், தனுசயன், ஜித்திகா) (அஸ்வின்,ஆசா, கிசோர், அபிசா), (அபினா, அபிலாஸ்,அக்ஷயன், அக்ஷனா) , (அபிஷேக், விதுஷன், கிருத்திகா, தினுசாந், சன்சிகன், சதுர்சிகா, லுகான்ஷன், கரிஸ்றேகன்), ( தனுஜன் , தாமிசா) (காலஞ்சென்ற செரோன்) ஆகிய பூட்டப்பிள்ளைகளுடனும். சகல சுக துக்கங்களையும் அனுபவித்து 2016. 01.13 அன்று இறைவன்அடி சேர்ந்துவிட்டார்.

**சிந்தனை துளிகள்**

- எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.
- ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினையாதே.
- நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுகிறாய்.
- சுதந்திரமானவனாக இரு. எவரிடத்தும் எதையும் எதிர்பார்க்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

கல்யாண மேடையில் கரம்பிடித்த நாங்கள்....
காலங்கள் கடந்தும், தோள்கள் சுருங்கியும்
நரம்புகள் தேய்ந்தும் பிரியாது துணையாய்
வாழ்ந்தோமோ........
இன்று காலன் அவன் அழைத்தான் என்று
என் கரம் விட்டு சென்றுவிட்டீர்கள்........

எனக்கென்று நீங்களும் உங்களுக்கென்று நானும்
தள்ளாடும் வயதிலும் பிரியாது சேர்ந்து இருந்தோமே.......
இன்று கண்களில் நீர் சொரிய கலங்கிய நிற்கின்றேனே......

" அம்மா" என்று என்னை நீங்கள் அழைப்பது- கூட
இன்னும் என் காதுகளில் கேட்கிறதே ஐயா......

யார் என்ன ஆறுதல் சொன்னாலும்
அழுது புலம்பினாலும் தீருமோ இந்த சோகம்......

பிறப்பும் இறப்பும் கடவுளின் சித்தம் என்று
என்னை தேற்றி.... உங்கள் ஆத்மா சாந்தியடைய
என் கண்ணீர் துளிகளை இறைவனுக்கு
காணிக்கையாக்குகிறேன்..........

மனைவி

சிவபாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் புலம்பல்

அழகான மாலைப் பொழுதில்
மேகம் மூடிய வானத்தில்
சூரியன் முகம் மறைக்கும் தருணத்தில்
எங்கள் புன்னகையும் பறி போனதே.......
அப்பா உங்கள் இறந்த செய்தி கேட்டு
இறுகி போனோமே..............!

எங்களை வயிற்றில் சுமக்கா விட்டாலும்
உங்கள் நெஞ்சில் சுமந்து வளந்தீர்களே........
எங்கள் வாழ் நாளில் எங்கு சென்றாலும்
யாரை சந்தித்தாலும் அப்பா என்ற
அன்புக்கு ஈடாகுமோ...........?

சூரியனை சுற்றும் ஒன்பது கோள்கள் போல்
உங்கள் ஒன்பது பிள்ளைகளும் உங்கள்
கால்களை சுற்றி வளந்தோமே.........
இன்று உங்கள் உயிரற்ற உடலைச் சுற்றி
கதறி அழ வைத்து வீட்டீர்கள் அப்பா........

எட்டு திக்கும் எட்டு பிள்ளைகள்
காவல் இருக்க பட்டது தெரியாது
பரலோகம் போனீரோ இனி
அப்பா வென்று யாரை அழைப்போம்
கூப்பிட்ட சத்தத்திற்கு குரல் கொடுக்கும் அப்பாவே.
சாப்பிட்ட வயிறு தளர்ந்து போனதப்பா
பால்பட்ட உலகில் பந்தமே அறியாதே
கூறு கெட்ட இயமன் எங்கள் குடியையே மூழ்க வைத்தான்.

என்றும் எங்கள் மனதில் தெய்வமாக
வாழுவீர்கள் நீங்கள் என்று உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்..........

பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் புலம்பல்

ஒவ்வொரு வருடமும் உங்களை
பார்க்க வென்று ஓடி வருவேனே அப்பா...
பார்த்தது போதுமென்று நினைத்து - இன்று
உங்கள் உயிரற்ற உடலை
பார்க்க வைத்துவிட்டீர்களே... அப்பா இன்று
நான் கதறி அழும் குரல் கேட்கிறதா உங்களுக்கு....

எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு
நீர் - மீளாத் துயில் கொண்டுவிட்டதேன்...?
எத்தனைபேர் நான் இருக்கிறேன்
என்று சொன்னாலும் அப்பாவைப் போல்
யார் இருக்க முடியும்....?
சொல்லுங்கள் அப்பா...
இன்று நான் விடும் கண்ணீர் துடைக்கவும்
நீங்கள் இல்லையே...
கண்காணாத தூரம் சென்று விட்டீர்களே...
இனி எப்பிறப்பில் உங்களைக் காண்பேன்.

ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் - நீரே
எனக்குத் தகப்பனாக வேண்டும் என்று
ஆண்டவனைக் கேட்பதோடு உங்கள்
ஆத்மா சாந்திக்காகவும் வேண்டுகிறேன்...

மகள் (இராஜேஸ்வரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

மருமக்கள் அனைவரையும் அன்போடு
ஒரு தகப்பனை போல் அரவணைத்தீர்களே மாமா....

நீங்கள் பெற்ற மக்களை நாங்கள்
மணம் முடிக்கும் போது
பெருமை கொள்ள வைத்தீர்களே....

காலங்கள் கடந்து சென்றாலும்
உங்கள் ஞாபகங்கள் மறவாது மாமா....

எதற்கும் கலங்காதவர்களையும்-உங்கள்
மரண ஊர்வலத்தில் கலங்கி நிற்க வைத்து விட்டீர்களே....

நீங்கள் பெற்ற பிள்ளைகளும் உங்கள் மருமக்கள்
நாங்களும் உங்களை எண்ணி அழும் குரல்
கேட்கிறதா மாமா.....

**உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை**
**பிரார்த்திக்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் புலம்பல்

பெரியப்பா நீங்கள் இறைவனடி
சேர்ந்து விட்ட செய்தி கேட்டு
கலங்கி நிற்கின்றோமே ஆறுதல்
சொல்ல யாருமற்று ......

பெறாமக்களான எங்களையும்
நான் பெற்ற மக்கள் தானே
என்றீர்களே......
வாழ்க்கையின் பாடங்களையும்
கற்று தந்தீர்களே......

தள்ளாடும் வயதிலும் இணைபிரியாது
நீங்கள் வாழும் வாழ்க்கையை தானே
நாங்கள் உதாரணமாய் எடுத்து வாழ்ந்தோம்.....
இன்று பெரியம்மாவை தனியாக விட்டு சென்றுவிட்டீர்களே....

இறந்தவர்கள் மீண்டும் வருவதில்லை என்று
அறிந்தும் மீண்டும்
உங்கள் முகம் காண முடியாதா
என்று தவிக்கின்றோம் பெரியப்பா.....

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை**
**பிரார்த்திக்கின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் புலம்பல்

இரத்தத்தின் இரத்தமாய்
ஒரே தாய் வயிற்றில் பிறந்து
கலகலப்பாய் ஒன்றாய் வளர்ந்தோமே சகோதரா....

மண வாழ்க்கை எனும்
தருணத்தில் வெவ்வேறு திசைகளில்
பிரிந்தாலும்......
பிரிக்க முடியாத உறவுதானே இது....

இருந்த போதும் பிரித்து விட்டான்
காலனவன் ..... தள்ளிவிட்டான் எங்களை
கண்ணீர் கடலில்

தவிக்கின்றோம் இன்று தொலைவில்
உன்முகம் காண கூட முடியவில்லையே என்று.....

**உன் ஆத்மா சாந்தியடைய என்று இறைவனை**
**பிரார்த்திக்கும் உன் அன்பு சகோதரர்கள்.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர்கள் புலம்பல்

மைத்துனன் மைத்துனி என்று அல்லாது
சகோதர பற்றோடு பழகினோம்.....

காணும் நேரமெல்லாம் பழைய கதை
பேசி சிரித்தோம்.....

இன்று தனியாக அழுகின்றோமே...
உங்கள் மரணச் செய்தி கேட்டு...

இறுதியாகக் கூட உங்கள் முகம்
காண முடியாத பாவிகள் ஆனோமே....

**உங்கள் ஆத்மா சாந்திக்காய் கடவுளை வேண்டுகின்றோம்....**

## மைத்துனி புலம்பல்

பெரியத்தான் என்று அருமையாகக் கூப்பிட
வாவென்று சொல்லி வரவேற்பீர்கள் - சிறுவயது
தொட்டு ஒரு மகளாக காத்தீர்கள்
பள்ளிக்கச் செல்லும் பருவத்தில் சைக்கிளின் பின்
பாடசாலை வாசல் வரை விடுவீர்களே
அக்காவையும் அத்தானையும் முன்னுக்கு வைத்து
முகூர்த்தம் பாப்பார்கள் - அக்கா இன்று
பூவிழந்து பொட்டிழந்து பின்னுக்கு நின்று
பெருமூச்சு விடுகின்றார் ஆறுதல் சொல்ல யாருமில்லை
அத்தான் இனி எப்பிறப்பில் காண்பேனோ
உங்களை...

மின்னல் கொடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்களின் தாத்தாவின் இறந்த செய்தி கேட்டு
கதறி துடிக்கின்றோம்...
உங்கள் அருகிலும்
உங்கள் முகம் காண முடியா தொலைவிலும்....

எங்கள் வருங்கால சந்ததிக்கு
உதாரணமாக ஜோடியாய் வாழ்ந்த நீங்கள்
இன்று எம் அம்மம்மாவை தனியாக
தவிக்கவிட்டு சென்றதேனோ.....

பட்டு வேட்டியுடனும் பஞ்சுத் தலையுடனும்
கம்பீரமான உம் உருவத்தை எம் கண்முன்னே
கண்டு வருகின்றோம்....உங்கள்
மரண ஊர்வலம் கண்டு கலங்கி நிற்கின்றோம் தாத்தா....

ஆயிரம் உறவுகள் இருந்தும் தாத்தா என்றழைக்க
இருந்த எங்கள் ஒரே உறவு நீங்கள் தானே...
இனி யாரை அழைப்போமோ... உம் முகத்தை
எப்போது காண்போமோ....

எங்களுக்கு ஆசியும் ஆசீர்வாதமும்
வழங்கிய உங்களுக்கு நாங்கள் என்ன செய்தோம்....?
ஆண்டவனிடம் உங்கள் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கத் தானே முடிகிறது....!

உங்கள் பிரிவால் வாடும் ஈர் பதினாறு
பேரப்பிள்ளைகளின் பாசத்தையும் அள்ளிச் சென்ற
எங்கள் அன்புத் தெய்வமே உங்கள்
ஆத்மா சாந்தியடையட்டும்.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

பூட்டப்பா என்று நாங்கள் அழைக்கும் போது
நடுங்கும் உங்கள் கைகளால் அணைத்து
முத்தம் தருவீர்களே....

அறியாத எங்கள் வயதில் உங்கள்
உடலைச் சுற்றி தீப்பந்தம் பிடிக்க
வைத்தது நியாயமா பூட்டப்பா...?

உங்கள் தேகத்தின் பக்கத்திலும்
தேசம் கடந்த தொலைவிலும் - இருந்து
பூட்டப்பிள்ளைகள் நாங்கள் - கண்ணீர்
விட்டு அழும் அழுகுரல் கேட்கிறதா பூட்டப்பா...

இனி எப்பிறப்பில் உங்கள் பொக்கவாய்
சிரிப்பினை நாங்கள் காண்போமோ....

எங்களை விட்டு பிரிந்த எங்கள் அன்பு
பூட்டப்பாவின் ஆத்மா சாந்தியடைய கடவுளை
வணங்குகிறோம்.

பூட்டப்பிள்ளைகள்.

## தேற்றம்

முடி தரித்துக் கோலேந்தி முத்தொளிரும் வெண்குடைக்கீழ்
கரியதனின் பிடரியிலே அமர்ந்துவலம் வந்தவரும்
கொடிய பல போர் புரிந்து பெரும்பெற்றி கண்டவரும்
கொள்கையிலே மாறாது குன்றெனவே நின்றவரும்
படியினிலே பலகோடிப் பணஞ்சேர்த்துக் களித்தவரும்
பரதேசி ஆனவரும் படித்துயர்ந்த அறிஞர்களும்
மடிந்தபின்பு பிடிசாம்பர் ஆகிடுவார் அதுகண்டு
மனச்சாந்தி அடைவதுதான் மாந்தர்களின் கடனாகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
1924.11.16

உதிர்வு
2016.01.13

யாழ் நெடுந்தீவை பிறப்பிடமாகவும்
இல: 14, நாயன்மார் வீதி, நல்லூரை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.
## சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

அன்பு நிறைந்த உங்கள் சிரிப்பால்
அனைவரையும் அரவணைத்தீர்கள்
அன்பினால் எம்மையெல்லாம்
இன்பத்தில் திளைக்க வைத்தீர்கள்
துன்பம் துயர் மறந்து துள்ளிவிளையாடும் வேளையைத்
தொடுத்துநின்ற உன் உயிரை
காலன் கவர்ந்ததனால
சென்று விட்டாய்
இனியவரே உம் சிரிப்பை
என்று நாம் காண்போம் இனி?...

ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

உங்களின் பிரிவால் துயருறும்
(வேலுப்பிள்ளை)
சிவா } செல்வன்
துஷ }
புடம்பிள்ளைகள்
(மகள்) வேலகம்

ஜேர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் நெடுந்தீவை பிறப்பிடமாகவும்
இல 14, நாயன்மார் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

உம் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கிறோம்

**மகள், மோகன்ராஜ், சாந்தினி**
**பேரப்பிள்ளைகள்**
**வவுனியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1924 . 11 . 16



உதிர்வு
2016 . 01 . 13

இல:14, நாயன்மார் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

ஆத்மா சாந்ியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல:10, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1924.11.16 | 2016.01.13 |

[illegible] பிறப்பிடமாகவும் [illegible] வசிப்பிடமாகவும்
கொண்ட

அமரர்

## திரு.சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

அன்பின் உறைவிடமாய்
அனைவருக்கும் நிழல் மரமாய்
துன்பம் நீங்கும் அருமருந்தாய்
தூய வாழ்வு வாழ்ந்த திருமகனே
இவ்வுலகம் ஏங்கியழ
அவ்வுலகம் சென்ற [illegible]
பூவுலகில் பொன்னெழுத்தாய்
நின்று நிலைத்திருக்கும்
நினைவில் நீ இருப்பீர்

**அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப்**
**பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தகவல்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
1924 . 11 . 16

உதிர்வு
2016 . 01 . 13

## அமரர். சின்னத்தம்பி வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு............

| | | | |
|---|---|---|---|
| 1. | மிக நல்ல நாள் | - | இன்று |
| 2. | மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| 3. | மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| 4. | மிகப் பெரிய தேவை | - | சமயோசித புத்தி |
| 5. | மிகவும் கொடிய நோய் | - | பேராசை |
| 6. | மிகவும் சுலபமானது | - | குற்றங்காணல் |
| 7. | கீழ்த்தரமான விடயம் | - | பொறாமை |
| 8. | நம்பக் கூடாதது | - | வதந்தி |
| 9. | ஆபத்தினை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| 10. | செய்யக் கூடாதது | - | உபதேசம் |
| 11. | செய்ய வேண்டியது | - | உதவி |
| 12. | விலக்க வேண்டியது | - | விவாதம் |
| 13. | உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| 14. | நழுவவிடக் கூடாது | - | வாய்ப்பு |
| 15. | இளமையில் தேவை | - | கல்வி |
| 16. | உருகும் உள்ளத்தில் உதிப்பது | - | அன்பு |
| 17. | இறுகும் உள்ளத்தில் உதிப்பது | - | அகந்தை |
| 18. | அன்பு விளைவிப்பது | - | ஒற்றுமை |
| 19. | அகந்தை விளைவிப்பது | - | வேற்றுமை |
| 20. | வேற்றுமையில் விளைவது | - | துன்பம் |
| 21. | வருவதும் போவதும் | - | இன்பம், துன்பம் |
| 22. | வந்தால் போகாதது | - | அவமானம், பழி |
| 23. | போனால் வராதவை | - | மானம், உயிர் |
| 24. | தானாக வருவது | - | இளமை, முதுமை |
| 25. | நம்முடன் வருவது | - | பாவம், புண்ணியம் |
| 26. | அடக்க முடியாதது | - | ஆசை, துக்கம் |
| 27. | தவிர்க்க முடியாதது | - | பசி, தாகம் |
| 28. | நம்மால் பிரிக்க முடியாதது | - | பாசம், பந்தம் |
| 29. | அழிவைத் தருவது | - | பொறாமை, கோபம் |
| 30. | எல்லோருக்கும் சமமானது | - | பிறப்பு, இறப்பு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும்

- ☞ நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை(*Ego*) விடுங்கள்.
- ☞ அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள் *(Loose Talks)*
- ☞ எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காகக் கையாளுங்கள் *(Diplomacy)* விட்டுக்கொடுங்கள் *(Compromise)*
- ☞ சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத் தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள் *(Tolerance)*.
- ☞ நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் *(Adamant Argument Mindedness)*.
- ☞ உண்மை எது பொய் என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் விடுங்கள். *(Carrying Tales)*.
- ☞ எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- ☞ கேள்விப்படுகின்ற எல்லா விடயங்களையும் நம்பிவிடாதீர்கள்.
- ☞ அற்ப விடயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
- ☞ உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் *(Flexibility)*
- ☞ மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சி களைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். *(Misunderstanding)*.
- ☞ மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய,இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் *(Courtesy)*
- ☞ புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- ☞ பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கடந்த 13-01-2016 அன்று இறைபதமடைந்த
எங்கள் குல விளக்கு
அமரர்
சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

வாழ்க்கையில் ஊன்றுகோலாகி இருந்த அனைவருக்கும், அவரின் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் வைத்திய உதவி செய்த வைத்தியருக்கும், அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வருகை தந்து நேரில் ஆறுதல் கூறி தேற்றிய உறவினருக்கும், அயலவருக்கும், நண்பர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், வெளிநாட்டிலிருந்தும். உள்நாட்டிலிருந்தும் தொலைத் தொடர்பு மூலம் கவலையைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், சகல வழிகளிலும் உதவியோருக்கும், ஈமைக்கிரியை நடத்திய குருமாருக்கும், தேவாரப் பாட்டுக்காரருக்கும், மலர்மாலை இட்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், இம்மலரை அச்சிட்டு உதவிய நல்லூர் திருவள்ளுவர் அச்சகத்தினருக்கும், முப்பத்தோராம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தோருக்கும், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தக் கொள்கின்றோம்.

நன்றிகள்.

14, நாயன்மார் வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




* காலமானவர்கள்
● பிள்ளைகள்
♦ மருமக்கள்
❖ பேரப்பிள்ளைகள்
▫ பேரன், பேர்த்தி
○ பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ்சாவழி

வேலுப்பிள்ளை + தெய்வானைப்பிள்ளை

சிவபாக்கியம்
* சரஸ்வதி
மின்னல்கொடி

யோகேஸ்வரி
+
சுப்பிரமணியம்

❖அனுசயந்தன்
+
▫அன்னலட்சுமி

○ அக்ஷயன்
○ அக்ஷனா

❖பிரசாந்தினி

● நாகசோதிலிங்கம்
+
♦ ரஞ்சனி

❖நதியா
❖ருபிதன்
❖டனிசா

●இராஜேஸ்வரி
+
♦ குலேந்திரன்

❖சுகிந்தன்
❖சுமித்தா
❖சுகந்தன்

● சாந்தினி
+
♦ மதிஜீவன்

❖நதர்சிங்
+
▫பகீர்த்தனா

○ தனுஜன்

❖கேதீஸ்சன்
+
▫சஷ்மிதா

○ தாமிசா

❖பவித்திரா
+
▫றொசாந்தன்

○* செரோன்

லக்சன்

● நகுலேஸ்வரி
+
♦ பாலசுப்பிரமணியம்

❖கவிதா
+
▫ கண்ணன்

○ அபிஷேக்

❖றஜிதா
+
▫ நேசன்

○ கிருத்திகா
○ தினுசாத்

❖கார்த்திக்
+
▫ சந்தோஷினி

○ சன்சிகன்
○ சதுர்ஷிகா

❖விஜிதா
+
▫ நரேஸ்

○ விதுஷன்

❖கௌதமி
+
▫ டொனிஸ்றேகன்

○ லுகான்ஷன்
○ கரிஸ்றேகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாவதற்கு,
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்"
இந்த மாற்ற உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

திருவள்ளுவர் அச்சகம், நல்லூர். தொ.பே: 021 222 2181

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org